# சிலுவையின் வழி நெடுகே..



தொ. சூசைமிக்கேல்

## அறிவிப்பு

இந்நூல் ஓர் இலவச வெளியீடு. இதனைப் பிரதிகள் எடுக்கவும் பிறரோடு பகிர்ந்துகொள்ளவும் அனுமதி வழங்கப்படுகிறது.

இவண்,
நூலாசிரியர்.

## திருப்பாடுகள் - ஓர் அறிமுகம்

ஒரு கிறிஸ்தவனைப் பொறுத்தமட்டில், அவன் ஏசுவின் சிலுவைப் பாடுகளை அறிவதற்கு எவ்வித அறிமுகமும் தேவையில்லை. ஏசு பெருமானின் கல்வாரி மலைத் திருப்பாடுகள், எந்தவொரு கிறிஸ்தவனின் உள்ளத்திலும் ஆழப் பதிந்த அடையாளங்களாக எப்போதும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. இருந்த போதிலும், தவக்காலச் சூழ்நிலையில் இந்தச் சிலுவைப் பாதைச் சிந்தனைகள் மற்றெல்லாக் காலங்களை விடவும் மேலோங்கி நிற்பதை நாம் அறிவோம். களங்கமே இல்லாத கருணையின் அவதாரம், கள்வருட் கள்வனாகக் கழுமரத்தில் அறையப்பட்டுச் சாகடிக்கப்பட்ட சம்பவமானது சரித்திரத்தின் ஒரு மாறாத வடு என்பதை மானுட வர்க்கம் இன்றுவரை மறக்காமல் இருக்கிறது.

தவக்காலத்தின் பொருட்டு ஆண்டுதோறும் நினைவுகூரப்படும் நமது ஆண்டவரின் திருப்பாடுகள், வாழ்க்கையின் எல்லாக் கட்டங்களின்போதும் எண்ணப்பட வேண்டும். இறைவனின் கருணை எத்துணைப் பெரிது என்பதும், நமது பிழைகள் இறைவனை வருத்துமளவு எத்துணைக் கொடிது என்பதும் இந்நேரம் உணரப்பட வேண்டும். அந்த உணர்வினையே நம் உள்ளத்தில் இருத்தி, உத்தம மனஸ்தாப மந்திரத்தை உருக்கமுடன் சொல்லுவோம்:

## உத்தம மனஸ்தாப மந்திரம்

சர்வேசுரா, சுவாமி! தேவரீர் அளவில்லாத சகல நன்மையும் நிறைந்தவராகையால் எல்லாவற்றிற்கும் மேலாக உம்மை நான் முழுமனதோடு நேசிக்கிறேன். இப்படிப்பட்ட தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேனே என்று மிகவும் மனம் நொந்து மெத்தவும் மனஸ்தாபப்படுகிறேன். எனக்கிதுவே மனஸ்தாபமில்லாமல் வேறு மனஸ்தாபமில்லை. எனக்கிதுவே துக்கமில்லாமல் வேறு துக்கமில்லை. இனிமேல் ஒருபொழுதும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லை என்று உறுதியான மனதுடனே பிரதிக்னை செய்கிறேன். மேலும் எனக்குப் பலம் போதாமையால், ஏசுநாதர் சுவாமி பாடுபட்டுச் சிந்தின திரு இரத்தப் பலன்களைப் பார்த்து, என் பாவங்களையெல்லாம் பொறுத்து, எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும் மோட்ச பாக்கியத்தையும் தந்தருள்வீர் என்று முழுமனதோடு நம்பியிருக்கிறேன். திருச்சபை விசுவசித்துக் கற்பிக்கிற சத்தியங்களை எல்லாம் தேவரீர் தாமே அறிந்திருப்பதனால் நானும் உறுதியாக விசுவசிக்கிறேன். ஆமென்.

●

# ஒன்றாம் தலம்

- திவ்ய ஏசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அது ஏனென்றால், உம்முடைய பரிசுத்தமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

## ஆண்டவருக்கு மரண தண்டனைத் தீர்ப்பிடப்படுகிறது.

அனைத்துலகின் மீதும் அண்ட சராசரங்கள் மீதும் அதிகாரம் செலுத்தும் வரலாற்று நாயகன் ஏசுக் கிறீஸ்து, ஒரு சாதாரண உரோமை அரசு அதிகாரி முன்னே குற்றவாளியாக நிற்கிறார். 'யூதனுக்கு நீ அரசனா?' என்ற கேள்வி, யுகங்களுக்கெல்லாம் அரசனிடம் கேட்கப்படுகிறது. 'உண்மையா, அது என்ன?' என்னும் கேள்வி, உண்மையை உலகுக்கு உரைத்திட வந்தவரிடமே கேட்கப்படுகிறது. பாவங்களை மன்னிக்கின்ற வல்லமை படைத்தவரைப் பிடித்துவந்து 'பாவி' என்று பட்டம் சூட்டிப் பார்க்கிறது மனித இனம். குற்றமற்ற கொற்றவனை இழுத்துவந்து கூண்டில் ஏற்றியிருக்கிறது மனித இனம். இப்படியொரு கொடிய மரண தண்டனையை மௌனத்தோடு எதிர்கொள்ளும் இறைவன், மனித இனத்துக்காகத் தன்னையே அர்ப்பணிக்கிறார். இந்த

மௌன அர்ப்பணத்தின் உள்ளூறை உணர்வுதான் இன்றைய சிலுவை வழிபாட்டின் மூலம் ஆண்டவர் ஏசு நமக்கு வழங்கும் அடிப்படைச் சிந்தனையாகும். எவ்விதமான இன்னல்களையும் மௌனத்தோடு எதிர்கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் நாம் தயாராக இருக்கவேண்டும் என்பதைத்தான், இங்கே ஏசு நமக்குக் கற்பிக்கின்றார்.

***மன்றாட்டு:***

*அன்பின் ஆண்டவர் ஏசுவே! எதிர்ப்படும் இன்னல்கள் எத்தனைக் கொடுமையாக இருப்பினும், அவற்றைப் பொறுமையோடு நாங்கள் சந்திக்கத் துணிச்சலையும் தூய உள்ளத்தையும் தந்தருளும். ஆமென்.*

*(ஒரு பர. அரு. திரி.)*

- *எங்கள் பேரில் தயவாயிரும், சுவாமி தயவாயிரும்.*
- *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.*

●

## இரண்டாம் தலம்

- திவ்ய ஏசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அது ஏனென்றால், உம்முடைய பரிசுத்தமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

### ஆண்டவர் மீது சிலுவை சுமத்தப்படுகிறது.

தன்னந்தனியனாக நிற்கின்றார் ஏசு. சுற்றிலும் ‘கொல்லுங்கள்! கொல்லுங்கள்!’ என்று கொக்கரிக்கும் கும்பலின் ஆரவாரம்... கல்வாரிப் பயணத்தைத் தொடங்கிடக் கர்த்தர் இதோ, ஆயத்தமாகிறார். ‘மண்டையோடு’ எனப்படும் அந்தக் கல்வாரி மலைப்பாதை, மலர் விரிப்பு அல்ல: கல்மேடுகளும் முள்வேலிகளும் அடர்ந்த கரடுமுரடான பாதை அது. அவ்வழியேதான் ஆண்டவர் ஏசுவின் தூய பாதங்கள் நடைபோட வேண்டும். அதுவும் வெறுமனே அல்ல: பாரமான சிலுவையொன்றைத் தனது தோள்மீது சுமந்தபடி நடைபோட வேண்டும். சாட்டையடிகளால் தளர்ந்துபோன உடலையும், தலைமீது தைத்துக்கொண்டிருக்கும் முட்களால் விளைகின்ற தாங்கொணா வேதனையையும் ஏற்கெனவே சுமந்து நிற்கும் ஏசுவுக்கு, இன்னொரு சுமையாக சிலுவையும் இணைந்துகொள்கிறது. அந்தோ! மீட்க வந்த இறைவனின்

மேனியெங்கும் வேதனை! துயரங்களின் படலம் ஆரம்பமாகிறது. சுமத்தப்பட்டிருப்பது சிலுவையல்ல: ஒவ்வொரு மனிதனும் இறைவனுக்கு எதிராக இழைக்கின்ற பிழைகளின் திரட்சிதான் என்பதை நாம் இங்கே உணர்வோமாக.

***மன்றாட்டு:***

*அன்பின் ஆண்டவர் ஏசுவே! எங்களுக்கு மீட்பும் விடுதலையும் பெற்றுத் தருவதற்காகத்தான் நீர் சிலுவையைச் சுமக்கச் சித்தமானீர் என்னும் உணர்வு, எங்களிடம் எப்போதும் இருந்துவரத் துணைபுரியும். ஆமென்.*

*(ஒரு பர. அரு. திரி.)*

- *எங்கள் பேரில் தயவாயிரும், சுவாமி தயவாயிரும்.*
- *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.*

●

## மூன்றாம் தலம்

- திவ்ய ஏசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அது ஏனென்றால், உம்முடைய பரிசுத்தமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

### ஏசு முதன்முறை கீழே விழுகிறார்.

சிலுவையின் கொடிய பளுவைத் திருச்சுதனால் தாங்க முடியவில்லை. செதுக்கப்படாத அந்தக் குறுக்குமரத்தைச் சேசு பெருமானின் சிதைந்துபோன உடலால் எப்படித் தாங்க முடியும்? தாங்க முடியாத வேதனையால் துடிக்கும் ஆண்டவர் ஏசு, சிலுவையின் பாரத்தைத் தாங்க முடியாமல் கீழே விழுகிறார். வீழ்ந்து கிடக்கும் இறைவனைத் தூக்கிப் பிடிக்க யாரும் இல்லை. சூழ நிற்கும் வீரர்களோ அவரை மீண்டும் அடிக்கிறார்கள்: அதட்டுகிறார்கள்.. கேலியான வார்த்தைகளால் அவரைக் கீழ்த்தரமாக நடத்துகிறார்கள்.. சர்வ வல்லமை படைத்த பரம்பொருள், கயவர்கள் முன்னிலையில் ஒரு பரிகாசப் பொருளாகத் துவண்டு கிடக்கிறது.. தரையிலே வீழ்ந்ததனால் ஏற்பட்ட காயங்களும் வலியும் அவரை எழுந்திருக்க முடியாமல் தடுக்கின்றன. இருந்த போதிலும், அனைத்து வேதனைகளையும் தாங்கிக்கொண்டு அவர்

எழுந்திருக்கத்தான் வேண்டும். மனித இனத்தின் மீட்புக்காக அவர் மறுபடியும் எழுந்து நடக்கத்தான் வேண்டும். சிலுவையின் பாரம் அவரை விழத்தாட்டும் போது, அந்தப் பாரத்தின் மீது அழுத்தமாக அமர்ந்து வருத்துவது மண்ணுலகின் பாவம்தான் என்பதை நாம் உணரவேண்டியது அவசியம்.

***மன்றாட்டு:***

*அன்பின் ஆண்டவர் ஏசுவே! சிலுவையின் பாரம் தாங்காமல் நீர் கீழே விழுவதன் காரணம் எங்கள் அனைவருடைய பாவங்களின் பாரம்தான் என்பதை நாங்கள் உணரவும், அந்த உணர்வுகளோடு திருந்திய வாழ்க்கை நடத்தவும் வழிகாட்டியருளும். ஆமென்.*

*(ஒரு பர. அரு. திரி.)*

- *எங்கள் பேரில் தயவாயிரும், சுவாமி தயவாயிரும்.*
- *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.*

●

## நான்காம் தலம்

- திவ்ய ஏசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அது ஏனென்றால், உம்முடைய பரிசுத்தமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

### ஏசு தனது அன்னையைச் சந்திக்கிறார்.

கல்வாரிப் பயணம் தொடர்கின்றது. விழுந்து கிடந்த நம் ஆண்டவர் மீண்டும் எழுந்து நடக்கிறார்.. தோளிலே சிலுவை.. நெஞ்சிலே துயரம்.. அங்கமெங்கும் ஆறாக் காயங்களுடன் ஆண்டவர் ஏசு நடந்து வருகிறார்.. அப்போது தனது அருமை அன்னை எதிர்ப்படக் காண்கிறார்.. இருவர் கண்களும் சந்திக்கின்றன.. கொடுமையின் உச்சம் என்பது இதுதான்!.. ஏசுவின் தாய் என்ற உயரிய நிலையில் இருக்கின்ற ஒரு பெண்மணிக்கு இதைவிடப் பெரிய வேதனை என்ன இருக்கப் போகிறது?.. சாதாரண மாதா அவள்?.. சர்வேசுரனின் மாதா அவள்!.. அனைத்து உயிர்களையும் ஈன்றெடுத்த இறைவனை ஈன்றெடுத்த தாய் அவள்!. ஏறெடுத்து நோக்குகின்றாள் தனது இனிய மகனை.. தனது மார்மீதும் தோள்மீதும் தவழ்ந்து விளையாடிய மழலை, தன் கண்முன்னே தள்ளாடித் தள்ளாடிச் சிலுவையைச் சுமந்துவரும்

காட்சியை அவள் எப்படிச் சகிப்பாள்?.. பெருக்கெடுத்தோடும் கண்ணீருக்கிடையே உருக்கத்தோடு தன் மகனை உற்று நோக்குகின்றாள்.. தாயாரின் வேதனையை அந்தத் தவப்புதல்வனின் ஞானம் அறியாமலிருக்கவில்லை.. அறிந்திருந்தும் அந்தத் துயரத்தை இருவர் இதயமும் தாங்காமலும் இருக்கவில்லை.

***மன்றாட்டு:***

*அன்பின் ஆண்டவர் ஏசுவே! உமது ஆருயிர் அன்னைக்கு நேர்ந்த துயரத்தில் ஒருதுளியேனும் நாங்கள் பங்கெடுத்து வாழவேண்டுமென்னும் எண்ணத்தையும், உம்மைக் காயப்படுத்தும் வேளைகளில் எல்லாம் உமது அன்னையையும் காயப்படுத்துகிறோமென்னும் எண்ணத்தையும் எங்களுக்குத் தந்து நல்வழிப் படுத்தியருளும். ஆமென்.*

*(ஒரு பர. அரு. திரி.)*

- *எங்கள் பேரில் தயவாயிரும், சுவாமி தயவாயிரும்.*
- *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.*

●

## ஐந்தாம் தலம்

- திவ்ய ஏசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அது ஏனென்றால், உம்முடைய பரிசுத்தமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

**ஏசுவின் சிலுவையை சுமக்க சீமோன் உதவுகிறார்.**

ஆண்டவர் ஏசுவால் சிலுவையைச் சுமந்தபடித் தொடர்ந்து முன்னேற முடியவில்லை. செல்ல வேண்டிய தூரம் இன்னும் இருக்கிறது. இடையில் அசம்பாவிதமாக எதுவும் நிகழ்ந்துவிடக் கூடாதே என்ற அச்சம் யூதர்களை ஆட்டிப் படைக்கிறது. எனவே வயற்காட்டிலிருந்து வெளிப்பட்ட சிரேன் கிராமத்தானாகிய சீமோனை வலுக்கட்டாயமாக ஏசுவுக்குத் துணைபுரியச் செய்கின்றார்கள். அந்தச் சீமோனின் கரங்கள் உண்மையிலேயே பேறுபெற்றவை. ஏசுவின் உடலைத் தீண்டிய சிலுவையை இவரும் தீண்டுகிறார் என்னும்போது, அந்தப் பாக்கியத்தை என்னென்பது! இந்த உதவியானது யூதர்களின் கருணையால் வந்தது அல்ல: உச்சி வரை இந்தக் குற்றவாளியைக் கொண்டு சேர்க்க வேண்டுமே என்ற அவர்களது கவலையால் வந்தது. இருப்பினும், ஆசீர்வதிக்கப்பட்டவை சீமோனின் கரங்கள். அவர்

கரங்களோடு நமது கரங்களும் சேர வேண்டியது கடமை. சுமத்தப்பட்டிருக்கும் சிலுவையின் பாரத்தில் பங்குகொள்ள வேண்டிய பொறுப்பு நமக்கும் உள்ளது என்பதை உணர வேண்டியது இந்த உலக மாந்தர் அனைவரின் கடமை.

***மன்றாட்டு:***

*அன்பின் ஆண்டவர் ஏசுவே! உமது பாரச் சிலுவையைச் சுமக்க உதவிய சீமோன் போல, எங்கள் சகோதரர்களுக்கு நேரும் இடர்களை நாங்களும் பகிர்ந்துகொண்டு ஆறுதல் வழங்க அருள் புரிந்தருளும். ஆமென்.*

*(ஒரு பர. அரு. திரி.)*

- *எங்கள் பேரில் தயவாயிரும், சுவாமி தயவாயிரும்.*
- *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.*

●

# ஆறாம் தலம்

- திவ்ய ஏசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அது ஏனென்றால், உம்முடைய பரிசுத்தமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

## ஏசுவின் திருமுகத்தை வெரோணிக்கம்மாள் துடைக்கிறாள்.

தோளில் சுமந்த சிலுவையோடு குன்றிக் குன்றி நடந்து செல்லும் ஏசுவைச் சுற்றிலும் கூட்டம் அலைமோதுகிறது.. வேடிக்கை பார்க்கும் கூட்டம் ஒருபுறம்: வேதனையை வெளிக்காட்ட இயலாத கூட்டம் இன்னொரு புறம்: 'இதோ! மனிதன்!' என்று பிலாத்து கூறிய இரங்கல் உணர்வுகளை இன்னமும் ஏந்திய வண்ணம் ஈர விழிகளுடன் நின்று புலம்பிடும் இதயங்கள் மற்றொரு புறம்! அப்படிப்பட்ட இரக்க இதயம் படைத்தவர்களில் ஒருத்தியாக வெரோணிக்கம்மாள் என்பவள் விழிகலங்க நின்றுகொண்டிருக்கிறாள்.. பரிதாபத்திற்குரிய ஏசுவின் திருமுகத்தை அவள் பரிவோடு நோக்குகின்றாள்.. எத்தனை வசீகரம் மிகுந்தது ஏசுவின் தூய வதனம் என்பதை அவள் நன்கு அறிவாள். 'யாரைத் தேடுகிறீர்கள்?' என்ற வினா ஒன்றாலேயே வீரர்களை வீழ்த்திய விழிகளை ஏந்திய

வதனம், இதோ மங்கிய மெழுகுவர்த்தி போலச் சோர்ந்துபோயிருப்பதைக் கண்டு துடிக்கிறாள் வெரோணிக்கம்மாள். துணிந்து முன்னே வருகிறாள்.. குருதிக் கறைபடிந்து துயர ரேகைகளால் களையிழந்து போன இரட்சகனின் முகத்தைத் துடைக்கிறாள்.. அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்கிறது.. ஆண்டவனின் திருமுகச் சாயல் வெரோணிக்கம்மாளின் ஆடைப் பரப்பிலே அச்சுப் பதிவாகிறது. நம் ஒவ்வொருவர் இதயத்திலும் இந்த அதிசயம் நிகழவேண்டும். ஏசுவின் திருமுக முத்திரை அங்கே தெளிவாகப் பதியவேண்டும்.

***மன்றாட்டு:***

*அன்பின் ஆண்டவர் ஏசுவே! உமது வேதனையை நாங்கள் ஒவ்வொரு கணமும் உணரவும், அதன் காரணமாக உமது இரக்கத்தின் சாயல் எங்கள் ஒவ்வொருவர் இதயங்களிலும் பதியவும் அருள் புரிந்தருளும். ஆமென்.*

*(ஒரு பர. அரு. திரி.)*

- *எங்கள் பேரில் தயவாயிரும், சுவாமி தயவாயிரும்.*
- *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.*

●

# ஏழாம் தலம்

- திவ்ய ஏசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அது ஏனென்றால், உம்முடைய பரிசுத்தமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

## ஏசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்.

தளர்ந்து போன ஏசுவின் திருவுடல் மீண்டும் மீண்டும் தள்ளாடுகிறது. கொடிய சிலுவையின் பளுவால் அந்தத் தூய மேனி துவண்டுவிட்டது. தொடர முடியவில்லை தனது நடையை.. பலனற்றுக் கிடந்தவர்களுக்கெல்லாம் பலம் தந்து நடக்கச் சொன்ன நாயகனின் பொன்னுடல், இதோ! பலனற்றுப் போய் நடக்க முடியாமல் துன்பப்படுகிறது.. சுமத்தப்பட்ட சிலுவையோடு ஏசு மீண்டும் கீழே விழுகிறார்.. எத்தனை வேதனையால் துடித்திருப்பார் நம் இறைவன்!.. ஆர்ப்பரிக்கின்ற கூட்டத்தின் மத்தியில் ஓர் அனாதையாக விழுந்து கிடக்கின்ற அந்த உத்தமனின் இதயம் என்ன பாடு பட்டிருக்கும்!.. இதற்காகவா மண்ணுலகுக்கு வந்தார்? இப்படியொரு நிந்தையை எதிர்கொள்வதற்காகவா அவர் மனிதனாகப் பிறந்தார்? நெஞ்சு பொறுக்குதில்லை.. எனினும், இறைமகன் ஏசு நெஞ்சுறுதி பூண்டவராக எழுந்திருக்க முயல்கிறார்..

விழுந்து கிடக்கும் மனித இனத்துக்குத்தான் எழுந்திருக்கச் சக்தியில்லை: ஆனால் இறைவன் ஏசுவுக்கு அது இயலாத செயலா, என்ன? சித்தம் கலங்காத இறைவனுக்குத் தந்தையின் திட்டம் என்னவென்பது தெரியாமலில்லை: எனவே நிச்சயம் நமக்காக இறைவன் எழுந்திருப்பார்.. ஆனால், நாம்தாம் அவரைப் பலமுறை கீழே விழவைத்துக் கொண்டிருக்கிறோம்.

***மன்றாட்டு:***

*அன்பின் ஆண்டவர் ஏசுவே! நீர் சுமைதாங்காமல் விழும் ஒவ்வொரு நொடிப் பொழுதும் நாங்கள் உம் அருகிருந்து அழவேண்டிய மனநிலையை எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.*

*(ஒரு பர. அரு. திரி.)*

- *எங்கள் பேரில் தயவாயிரும், சுவாமி தயவாயிரும்.*
- *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.*

●

## எட்டாம் தலம்

- திவ்ய ஏசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அது ஏனென்றால், உம்முடைய பரிசுத்தமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

### ஏசு எருசலேம் மகளிருக்கு ஆறுதல் சொல்கிறார்.

திருச்சுதன் ஏசுவின் சிலுவைப் பயணத்திலே ஒரு வித்தியாசமான காட்சி இது! ஏசு நடந்து வருகின்ற துயரக் கோலத்தைக் கண்டு கதறியழுகின்றனர் எருசலேம் நகரத்துப் பெண்மணிகள். ஆண்டவர் ஏசு எருசலேம் நகர வீதிகளில் நிகழ்த்திய அற்புதங்களையும் ஆற்றிய அருஞ்செயல்களையும் நேரடியாகக் கண்டிருந்த அந்தப் பெண்மணிகளுக்கு, இப்படியொரு கோரக் காட்சி எத்தகைய குமுறலை ஏற்படுத்தியிருக்குமென்பதைச் சொல்ல வேண்டியதே இல்லை.. ஆனால் ஆண்டவர் அந்தப் பெண்மணிகளிடம் பேசுகிறார். இதுவரைக்கும் நிலவிய இறைவனின் திருவாய் மௌனம், இப்போதுதான் கலைகிறது.. அங்கே இறைவனின் வார்த்தை ஆறுதலாகவும் அறிவுரையாகவும் வெளிப்படுகிறது.. எருசலேம் பெண்களின் அழுகையில் நியாயம் இருக்கலாம். ஆனால், அந்த அழுகையின் காரணம் வேறொன்றாக

இருக்க வேண்டுமென்பதை இறைவன் சுட்டிக் காட்டுகிறார். ‘எருசலேம் பெண்களே! நீங்கள் எனக்காக அழவேண்டாம். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்!’ என்று திருவாய் மலர்ந்தருளிய இறைவன், நம்மிடமும் அதையேதான் சொல்ல விழைகின்றார்.. ‘அழுகையை நிறுத்து! அதன் அடிப்படைக் காரணத்தை மனதில் நிறுத்து!’ என்றுதான் இங்கே நம் ஆண்டவர் சொல்லாமல் சொல்லுகின்றார். எருசலேம் மாதர்கள் இன்றும் நம்மிடையே இருப்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். எதற்காக அழவேண்டும் என்பதையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

***மன்றாட்டு:***

*அன்பின் ஆண்டவர் ஏசுவே! எதற்காக நாங்கள் அழவேண்டும் என்று எங்களுக்குக் கற்றுத் தாரும். காரணம் அறிந்து கண்ணீர் வடித்து எம்மையே திருத்தி வாழ அருள்புரிந்தருளும். ஆமென்.*

*(ஒரு பர. அரு. திரி.)*

- *எங்கள் பேரில் தயவாயிரும், சுவாமி தயவாயிரும்.*
- *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.*

●

# ஒன்பதாம் தலம்

- திவ்ய ஏசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அது ஏனென்றால், உம்முடைய பரிசுத்தமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

## ஏசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்.

இரட்சகனின் திருவுடலில் இரத்தம் முற்றிலும் வற்றிப் போய்விட்டது. நரம்புகள் ஒத்துழைக்க மறுக்கின்றன. முள்முடியின் கொடுக்குகள் தலையெங்கும் தாங்கொணாத் தரிப்பை ஏற்படுத்துகின்றன.. கம்பீர நன்னடை பயின்ற கர்த்தனின் உடல், காயங்களின் கோரத்தால் நடுங்குகின்றது.. இந்நிலையில் எப்படி நடக்க முடியும்? இன்னும் எத்தனை அடிகள் தொடர முடியும்? நெருங்கிவிட்டது கல்வாரியின் மலை முகடு.. காத்திருக்கின்றார்கள் கொலை வெறியாளர்கள்.. எனினும், நடுங்கும் உடலோடு நடக்க வலுவின்றி ஏசு மீண்டும் கீழே விழுகிறார். ஏற்கெனவே இருமுறை விழுந்த இறைவனின் திருவுடல் இம்முறையும் தடுமாறி விழும்போது, ஏற்படுகின்ற வேதனையின் கொடுமையை விளக்கிட வார்த்தையே கிடைக்காது. உள்ளுறுப்புக்கள் எல்லாம் சிதைந்து, உடைந்து போன மட்கலம் போல் விழுந்து

கிடக்கும் இறைவனை விழுந்து வணங்குவதைத் தவிர நமக்கு வேறென்ன கடமை இருக்க முடியும்? ஏனென்றால் அவர் விழுந்தது நமக்காக: நம் மீட்புக்காக.. விழுந்ததையெல்லாம் தூக்கி நிறுத்துகின்ற இறைவன், நமக்காகத்தான் விழுந்து கிடக்கின்றார்.. வாருங்கள்! அவரை நம் எளிய கரங்களால் தூக்குவோம்: அவரோடு நாமும் சிலுவைப் பயணத்தைத் தொடருவோம்..

***மன்றாட்டு:***

*அன்பின் ஆண்டவர் ஏசுவே! இவ்வுலக வாழ்க்கையில் நாங்கள் விழுகின்ற ஒவ்வொரு முறையும், வேதனைகளைச் சகித்துக்கொண்டு மீண்டும் எழுந்திருக்க எங்களுக்கு ஆன்ம பலத்ததைத் தந்தருளும். ஆமென்.*

*(ஒரு பர. அரு. திரி.)*

- *எங்கள் பேரில் தயவாயிரும், சுவாமி தயவாயிரும்.*
- *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.*

●

## பத்தாம் தலம்

- திவ்ய ஏசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அது ஏனென்றால், உம்முடைய பரிசுத்தமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

### ஏசுவின் ஆடைகள் உரியப்படுகின்றன.

ஏசு பெருமானின் தூய உடலோடு இதுவரைக்கும் ஒட்டி உறவாடி உரிமை கொண்டாடிய ஆடைகள், இப்போது உரியப்படுகின்றன.. உறைந்து போன இரத்தக் காயங்களோடு ஒட்டியிருந்த ஆடைகளை உரிந்து எடுக்கும்போது, புதையுண்டிருந்த புண்கள் மீண்டும் பிளந்துகொள்கின்றன.. வெந்த புண்ணில் வேல் செருகும் வேதனையை ஆண்டவருக்கு அவரது ஆடைகள் வழங்குகின்றன. இந்த ஆடையைத்தான் தொட்ட மாத்திரத்திலேயே குணமடைந்தாள் பெரும்பாடுள்ள பெண்ணொருத்தி. தன்னிடமிருந்து புறப்பட்ட வல்லமையைத் தனக்கே உணர்த்திய தனது ஆடையைத்தான் இப்போது உத்தமன் ஏசு உரிந்துகொள்ளச் சம்மதிக்கிறார்.. பெருந் திரளாக நிற்கின்ற ஈன மானிடர் முன்னிலையில், பிறந்த மேனியனாக நம் இறைவன் நிற்பது எவ்வளவு பெருத்த அவமானம்!..

இயற்கையே, உன்னைச் சிருஷ்டித்து விட்ட பெருந் தலைவனுக்கு நீ தருகின்ற பரிசு இதுதானா?.. எழில்பொங்கும் அருவிகளைக் கொண்டும் இனிய நன்னீர் ஆறுகளைக் கொண்டும் வானுயர் மலைகளைக் கொண்டும் உன்னைப் போர்த்தி அழகுபார்த்த இறைவன், இப்போது தனது மேனியைப் போர்த்திட ஆடையில்லாமல் நிற்பது நியாயந்தானா?.. இருந்த ஆடையையும் உரிந்து எடுத்துப் பங்குபோட்டுக்கொள்வதற்குக் கயவர்கள் காத்திருக்கின்றார்களே.. இந்தக் கொடுமையைத் தர்மம் எப்படிச் சகித்துக் கொண்டது?.. இவையனைத்தும் விடையே கிடையாத வினாக் குறிகளாகத்தான் வெறிச்சோடிக் கிடக்கின்றன..

***மன்றாட்டு:***

*அன்பின் ஆண்டவர் ஏசுவே! ஆடையின்றி அவமானப்பட்ட உமது அற்புத மேனியை எங்கள் புண்ணியங்களென்னும் புத்தாடைகளால் போர்த்தி மகிழ்ந்திட எங்களுக்கு வழிகாட்டியருளும். ஆமென்.*

*(ஒரு பர. அரு. திரி.)*

- *எங்கள் பேரில் தயவாயிரும், சுவாமி தயவாயிரும்.*
- *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.*

●

## பதினொன்றாம் தலம்

- திவ்ய ஏசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அது ஏனென்றால், உம்முடைய பரிசுத்தமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

### ஏசுவைச் சிலுவையில் அறைகிறார்கள்.

கொலைக்களம் இதோ, வந்துவிட்டது! கொல்லப்படுவதற்காகக் கொண்டு வரப்பட்ட செம்மறியாடு போலக் குற்றவாளிக் கோலத்தில் இறைவன் ஏசு கூனிக் குறுகி நிற்கிறார். ஏசுவின் உடல் அவர் சுமந்து வந்த சிலுவை மீதே கிடத்தப்படுகிறது... கூர்மையான இரும்பு ஆணிகள் நான்கு, குறிதவறாமல் ஏசுவின் உடல் மீது இரக்கமின்றி இறங்குகின்றன... உள்ளங்கைகளும் பாதங்களும் சிலுவையோடு சேர்த்து அறையப்படுகின்றன... தாங்கவே முடியாத வேதனை! சரித்திரமே கண்டிராத வேதனை! உரோமைய சாம்ராஜ்ஜியத்தின் சித்ரவதைப் பட்டியலில் ஒன்றுகூட விட்டுவைக்காமல் அனுபவித்துவிட்ட ஏசுவுக்கு, அந்தச் சித்ரவதைகளின் சிகரமான சிலுவைத் தண்டனையும் வழங்கப்படுகிறது. வேதனையால் துடிதுடித்தபடி தொங்கிக்கொண்டிருக்கிறது ஏசுவின் உடல்.. கடமை

தவறாக் கயவர் கும்பல், கருணைத் தெய்வத்தைக் கழுமரத்தில் ஏற்றிவிட்டது.. எந்தவொரு எதிர்ப்புமே இல்லாமல் இப்படியொரு அக்கிரமச் சம்பவம் எளிதாக அரங்கேறுகிறது. இத்தனைக் கொடுமைகளையும் பொறுமையோடு ஏற்றுக்கொள்கிறார் ஏசு. எவ்வித மறுப்பும் இன்றித் தன்னைச் சிலுவைச் சாவுக்கெனக் கையளித்துவிடுகிறார். ஒன்றை அடைவதற்காக இன்னொன்றை இழக்க வேண்டுமென்பதுதானே நியதி? இங்கே நம்மை அடைவதற்காக இறைவன் தன்னையே இழந்து நிற்கிறார்.

***மன்றாட்டு:***

*அன்பின் ஆண்டவர் ஏசுவே! எங்களுக்காக நீர் உம்மையே இழந்து நின்ற தியாகத்தை நாங்கள் ஒருபோதும் மறவாமலிருக்கவும், உம்மை எம் பாவங்களால் மீண்டும் அறையாமலிருக்கவும் எமக்கு நல்ல மனதைத் தந்து காத்தருளும். ஆமென்.*

*(ஒரு பர. அரு. திரி.)*

- *எங்கள் பேரில் தயவாயிரும், சுவாமி தயவாயிரும்.*
- *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.*

●

## பன்னிரண்டாம் தலம்

- திவ்ய ஏசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அது ஏனென்றால், உம்முடைய பரிசுத்தமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

### ஏசு சிலுவையில் உயிர்விடுகிறார்.

எல்லாம் முடிந்தது..! ஏசுவின் உயிர் சிலுவையிலேயே பிரிந்தது..! 'தலைசாய்க்கக் கூட இடமில்லையே' என்று தவித்தபடி 'தந்தையிடம்' தனது ஆவியை ஒப்படைக்கிறார் ஏசு. விரக்தியின் விளிம்பில் நெளிந்தபடி விம்மி விம்மி அழுதிருக்கிறார் ஏசு. 'ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர்?' என்னும் ஏசுவின் கேள்வி, எல்லையற்ற விரக்தியின் வெளிப்பாடுதான். ஆனால், அந்த விரக்தியின் மத்தியிலும் 'இவர்கள் செய்வது இன்னதெனத் தெரியார்..' என்றபடி மாற்றானுக்காக மன்னிப்புக் கோரிக்கை விடுத்திருக்கிறார் ஏசு. என்னே, இறைவனின் பெருங்கருணை! இறைவன் இறந்ததும் இயற்கை அழுதது!.. ஆவேசம் உற்றது!.. பூமி குலுங்கியது! புயற்காற்று வீசியது! கல்லறைகள் திறந்தன! கற்பாறைகள் பிளந்தன! 'ஐயகோ! மாசற்ற இறைமகனைச் சிலுவையில் அறைந்து கொன்றுவிட்டோமே!' என்று மக்களெல்லாரும் மார்பிலடித்துப் புலம்பினர்.. இயற்கையின் அத்தனை

ஜீவராசிகளும் இறைவன் ஏசுவுக்காக வரிந்து கட்டிக்கொண்டு நின்றன. 'என்ன ஆயிற்று, எங்கள் இறைவனுக்கு?' என்னும் அவர்தம் சீற்றம், அந்தப் பட்டப் பகல் வேளையைக் கூடச் செக்கர் வானக் கருக்கலாக்கிக் கொண்டிருந்தது…'இதோ! உன் தாய்.. இதோ! உன் மகன்..' என்னும் ஈசனின் அருள்வாக்கு, அவருடைய காலடியில் நின்றுகொண்டிருந்த தாய்க்கும் சீடருக்கும் புதியதோர் உடன்படிக்கையின் உணர்வினைப் புகட்டிக்கொண்டிருந்தது.. ஏசுவின் மரணம் இறைவனின் கருணையை அடையாளம் காட்டுவதாகும். அந்தக் கருணைக்கு உகந்ததுதானா மனித இனம் என்பதைக் காலம் நிச்சயமாக நிரூபித்தாக வேண்டும்.

***மன்றாட்டு:***

*அன்பின் ஆண்டவர் ஏசுவே! ஈடற்ற உமது உயிரைக் கொடுத்து எம்மை மீட்கச் சித்தமான உமது எல்லையற்ற கருணையை எப்போதும் வியந்து போற்றும் உள்ளம் தந்தருளும். ஆமென்.*

*(ஒரு பர. அரு. திரி.)*

- *எங்கள் பேரில் தயவாயிரும், சுவாமி தயவாயிரும்.*
- *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.*

●

## பதின்மூன்றாம் தலம்

- திவ்ய ஏசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அது ஏனென்றால், உம்முடைய பரிசுத்தமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

**ஏசுவின் உடல் தாயார் மடியில் வைக்கப்படுகிறது.**

ஈட்டியால் துளைக்கப்பட்ட விலாக் காயம் உட்பட, ஐம்பெருங் காயங்களோடு ஏசுவின் திருவுடல் சிலுவையினின்று இறக்கப்படுகிறது. சோகமே வடிவாகச் சோர்ந்து போயிருக்கும் தூய அன்னையின் மடிமீது அந்தப் பூமேனி கிடத்தப்படுகிறது.. உயிரற்ற சடலம்தான்: என்றாலும், உயிர்களுக்கெல்லாம் ஊற்றான இறைவனின் உடலல்லவா அது? இதே உடல்தானே இதே மடிமீது தவழ்ந்து விளையாடியது? இதே உடல்தானே தன்னிடம் ஆசைதீர அமுது அருந்தியது? அன்னை மரியாளின் துக்கம் அணைகடந்து நிற்கிறது.. தனது மைந்தனின் மேனியைத் தடவிப் பார்க்கிறாள்.. தாங்க முடியவில்லை அந்தத் தாய்மையுள்ளத்தால்.. ‘எழுந்து நட!’ என்று ஆணையிட்ட இதழ்கள் அடங்கியிருந்தன.. காற்றுக்கும் கடலுக்கும் கட்டளையிட்ட கரங்கள் மடங்கியிருந்தன.. கலிலேயக் கடல்வாழிகளின் இல்லங்கள்தோறும்

சென்றுவந்த திருப்பாதங்கள் செயலிழந்து இருந்தன.. ‘உன்னை ஒரு வாள் ஊடுருவும்..’ என்ற தீர்க்கதரிசன வரிகள் அங்கே செயல்வடிவம் பெறுகின்றன... ஓர் அன்னையின் இதயம் இப்படி ஆற்றொணாத் துயரால் துடிக்கின்ற காட்சி, சரித்திரப் பக்கங்கள் இதுவரை சந்தித்தறியாதது..!

***மன்றாட்டு:***

*அன்பின் ஆண்டவர் ஏசுவே! உமது பொன்மேனியின் கோலத்தைக் கண்டு துயரத்தால் துடிதுடித்த அன்னை மரியாளின் சோகத்தில், நாங்களும் பங்கெடுத்து உம்மைப் போற்றித் துதிக்க அருள் தாரும். ஆமென்.*

*(ஒரு பர. அரு. திரி.)*

- *எங்கள் பேரில் தயவாயிரும், சுவாமி தயவாயிரும்.*
- *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.*

●

## பதினான்காம் தலம்

- திவ்ய ஏசுவே! உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
- அது ஏனென்றால், உம்முடைய பரிசுத்தமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

### ஏசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்.

தண்டனைத் தீர்ப்புக்கு இலக்காகிய இறைமகன் ஏசுவின் பூதவுடல் தனது இறுதி யாத்திரைக்குத் தயாராகின்றது. சரித்திர நாயகனின் சலனமற்ற திருச்சடலம், தனது நிரந்தர ஓய்வுக்காகக் காத்திருக்கின்றது.. அரிமத்தியாவூர் சூசை, தனக்கெனத் தோண்டி வைத்திருந்த கல்லறையை இறைமகன் ஏசுவின் உடல் அடக்கம் செய்யப்படுவதற்கென ஒதுக்கித் தருகிறார்.. பாருங்கள்! இறந்துபட்ட இறைமகனுக்குக் கல்லறைகூட இரவலாகத்தான் கிடைத்திருக்கிறது.. வாசனைத் திரவியங்களால் பூசப்பட்டு, மெல்லிய வெண்துகிலால் போர்த்தப்பட்டு, இறைவனின் தூய மேனி சகல வணக்கங்களுடன் கல்லறைக்குள் அடக்கம் செய்யப்படுகிறது. அமைதியின் இறைவன் அங்கே அமைதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்.. பாடுகளின் சகாப்தம் விடைபெற்றுக் கொள்கிறது. நீடுதுயில் கொள்ளத் தொடங்கும் பரம்பொருளின் அறிதுயில் இங்கே ஆரம்பமாகிறது. ஆம்: அனைத்தையும்

அறிந்துகொண்டிருக்கும் இறைவனுக்கு ‘உறக்கம்’ என்பது எப்படிச் சாத்தியம் ஆகும்? இறைவனின் அடக்கம் உறக்கம் அல்ல: அறிந்துகொண்டே இறைவன் உறங்குவதாக எண்ணுவோம். கல்லறைக்குள் அடக்கமாகி இருப்பது கடவுள்தான்: ஆனால், உயிர் பிரிந்த நிலையிலும் உயிர்ப்பின் கடவுளாக அவர் அடக்கமாகி இருக்கிறார்.. மரணத்தால் அவர் அடக்கமாகி இருக்கிறார் என்பதைவிட, மரணம் அவருக்கு நிச்சயம் அடக்கமாகிவிடும் என்பதுதான் இங்கே இறையேசு நமக்கு வழங்கிடும் செய்தி.

***மன்றாட்டு:***

*அன்பின் ஆண்டவர் ஏசுவே! உமது வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லடக்கமும், அதன் வழியாக எங்கள் உள்ளங்கள் அனைத்திலும் ஊடுருவி நிற்கும் உயிர்ப்பின் நற்செய்தியும் எங்களை மேலும் மேலும் உமக்குகந்தவர்களாக மாற்றிட அருள்புரியும். ஆமென்.*

*(ஒரு பர. அரு. திரி.)*

- *எங்கள் பேரில் தயவாயிரும், சுவாமி தயவாயிரும்.*
- *மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமம் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.*

●

# மறுபடியும் அறைகிலோம் !!

குறுக்கு மரமென்னும் கொடிய சிலுவைதனில்
குற்றவாளிதான் தொங்குவான்:
வெறுக்க வைக்குமொரு வேதனைச் சாவை
விழி பிதுங்க அவன் தாங்குவான்..

ஆண்டு இரண்டாயிரத்தின் முன்னர் ஓர்
அண்ணல் தொங்கினார் சிலுவையில்!
வேண்டுமா அந்த வேதனைச் சாவு,
விண்ணவன் மைந்தன் மேனியில்?..

சிலுவையில் தொங்கும் திருமகன், மாசு
சிறிதுமற்ற நம் ஆண்டவன்:
கொலுவிருந்து கோலோச்ச வேண்டிய நம்
கொற்றவன்: குற்றமற்றவன்..

'யூதனுக்கு நீ அரசனோ?' என்று
யுக முதல்வனிடம் கேள்வியா?
பாதகர்க்குப் பரிகாசப் பொருளாகப்
பரம்பொருள் நிற்றல் நீதியா?

பாடனைத்தும் கணப் போழ்திலே மாற்றப்
பரமனுக்(கு) ஆற்றல் இல்லையா?
'மூட மானிடா! தள்ளி நில்!' என்று
மொழிவதென்ன, முடியாததா?..

உலக மாந்தர்க்குப் புதிய நற்செய்தி
உரைத்தவன் ஏசு அல்லவா?
குலை நடுங்கும் ஒரு தண்டனைத் தீர்ப்பு
கொடுமையின் உச்சம் அல்லவா?

ஐயகோ! அந்தத் தூயவன் மேனி
ஆயிரம் காயம் கண்டதேன்?
பொய்யர்தம் கையில் போதனைத் தெய்வம்
புண்களால் வெந்து நொந்ததேன்?..

ஒற்றைச் சொல்லிலே உலகை ஆக்கியோன்
உடலம் எங்கணும் குருதியோ?
வெற்றி மகுடமே சூடும் தலைமீது
விஷம் நிறைந்த கூர் முட்களோ?

முட்களாய் நின்று குத்துகின்றவை
முற்றும் நமது பாவங்களே..
வெட்கமின்றி நாம் புரியும் தீங்கெலாம்
வேந்தனைத் தாக்கும் முட்களே..

என்ன சொல்வதோ! ஏசு மன்னவா!
இன்னும் ஒரு தீங்கும் செய்கிலோம்:
மன்னித்தருளுவாய்: சிலுவை மீதினில்
மறுபடியும் உன்னை அறைகிலோம்..!!